109—

தோகைமலை ஒன்றியத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம்

***10129-திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், புதிய பழைய கட்டளைமேட்டு வாய்க்காலிலிருந்து தோகைமலை ஒன்றியத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் முடியுமா, நடக்குமா என்ற பல திட்டங்கள் எல்லாம் முடிக்கப்பட்டிருக்கின்றன. மணப்பாறை நகருக்கு சுமார் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் குடிதண்ணீர் பிரச்சினையைப் போக்கி அந்தப் பகுதி மக்களின் தாகத்தைத் தீர்த்திருக்கிறார்கள். அதற்காக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அந்தப் பகுதி மக்களின் சார்பாக என்னுடைய உளங்கனிந்த நன்றியை புரட்சித் தலைவியின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். தோகைமலை ஒரு வறண்ட பகுதியாகும். அதற்கு வேறு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால், பக்கத்திலே 10 கிலோ மீட்டர் தூரத்திலே ஓடுகின்ற இரண்டு வாய்க்கால்களிலிருந்து கொஞ்சம் தண்ணீரை பிரித்து எடுத்து அந்தப் பகுதியின் பாசனத்திற்கு தருவதற்கு அரசு முயற்சி எடுக்குமா, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி-மேட்டூர் பாசன ஒப்பந்தம் சம்பந்தமாக, அந்த நீர் தாவா சம்பந்தமாக நடுவர் மன்றத்திலே பிரச்சினை இருக்கிற காரணத்தினாலே, அந்தப் பகுதிகளிலே மேற்கொண்டு பாசனத்தை

விரிவுபடுத்த இயலாத சூழ்நிலையிலே அரசு இருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக முடிவு வந்ததற்குப் பின்னாலேதான் இதுபோன்ற திட்டங்களை அரசு பரிசீலிக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத்திற்குத் தரவில்லை என்றாலும், மழைக் காலங்களில் அந்தப் பகுதியிலுள்ள குளங்களுக்குத் தண்ணீரை திருப்பிவிட்டு, வீணாகப் போய் கடலிலே விழும் தண்ணீரை திருப்பிவிட்டு, அங்குள்ள குளங்களில் நிரப்பி வைத்தால் அங்கே நீர் பிடிப்பு அதிகமாகும். அங்கே இருக்கின்ற கால்நடைகள் குடிப்பதற்குக்கூட நீர் வசதியற்ற ஒன்றியமாக அது இருப்பதால், குளங்கள் மூலமாக தண்ணீரை நிரப்பிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் தாவாவை பொறுத்தமட்டிலே ஏற்கெனவே இருக்கின்ற பாசனங்களை, ஆயக்கட்டுகளை விரிவுபடுத்துவது என்பது இப்போது இயலாத காரியம். ஆகவே, அங்கே இருக்கின்ற தண்ணீரை டைவர்ட் செய்து வேறு பகுதிகளுக்குக் கொடுப்பது என்பதும் இயலாத காரியம். ஆகவே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல் நடுவர் மன்றத்தினுடைய முடிவு தெரிந்த பிறகுதான் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கமுடியும். ஆகவே, குளங்களுக்கு மற்ற நீரை திருப்பி விடுவதாக இருந்தாலும் சரி, மற்றபடி பாசனத்திற்கு பயன்படுத்துவதாக இருந்தாலும் சரி அதில் தற்போது அரசு முடிவு எடுக்க முடியாத நிலை இருக்கிறது. நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின் இறுதி முடிவுக்குப் பின்னர்தான் இது சம்பந்தமாக அரசு பரிசீலிக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. அறிவழகன்.

திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டளை கால்வாயும், பழைய கட்டளைக் கால்வாயும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றன. மேட்டூரிலிருந்து வருகின்ற தண்ணீரும், அதே சமயத்தில் அமராவதியிலிருந்து வருகின்ற தண்ணீரும் என்னுடைய தொகுதியிலே குறிப்பாக கட்டளை பகுதியிலே வெள்ள காலங்களில் மிகுந்த பாதிப்பை உண்டாக்குகின்றன. ஆகவே, என்னுடைய பகுதியிலே இருக்கின்ற கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கும், அதன் கீழ் பகுதியிலே இருக்கின்ற திரு. பாப்பா சுந்தரம் அவர்களின் தொகுதிக்கும், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குளங்களுக்கு, வருங்காலத்தில் நடுவர் மன்ற தீர்ப்பு முடிந்த பிறகாவது அந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பின்னாலேதான் எவ்வளவு ஆயக்கட்டுக்களை நாம் விரிவுபடுத்தமுடியும் - இருக்கின்ற ஆயக்கட்டுகளில் தண்ணீர் போதவில்லை என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினை- என்பதை பரிசீலிக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

110—

தேவக்கோட்டை—காரைக்குடி புறவழிச்சாலை அமைத்தல்

***20468**-திருமதி கற்பகம் இளங்கோ:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டை-காரைக்குடி புறவழிச்சாலை (பையாஸ் ரோடு) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி என்று சொல்லும் அளவுக்கு புதுப்புது யுத்திகளைக் கையாண்டு புதுமை படைத்துவரும் நமது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி காலத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் மிகவும் முக்கியமான நகரமாகவும், அதி வேகமாக வளர்ந்துவரும் நகரமாகவும் இருப்பது காரைக்குடி ஆகும். அங்கு சாலைகள் மிகவும் குறுகிய சாலைகளாக இருப்பதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனங்கள் ஓட்டுபவர்கள் சிரமப்படுகிறார்கள். விபத்துகளை தடுப்பதற்கும், நேரத்தை மிச்சப்படுத்துவதற்கும் இதுபோன்ற புறவழிச் சாலைகளை அமைத்துத்தர